

THE MADRAS LEGISLATIVE COUNCIL

Thursday, 1st November 1962.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. DR. P. V. CHERIAN) in the Chair.

STARRED QUESTIONS

I.—QUESTIONS AND ANSWERS.

MR. CHAIRMAN : Question No. 200. Vidwan T. Muthukannappan. (After a pause.)

Some sign on putting the question should be made by the hon. Member. I do not see the hon. Member.

VIDWAN T. MUTHUKANNAPPAN : I put the question, Sir.

Political party flags.

* 200 *Q.*—VIDWAN T. MUTHUKANNAPPAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to ban indiscriminate hoisting of political party flags in public places; and

(*b*) if so, the stage at which the matter now stands?

THE HON. SRI R. VENKATARAMAN (on behalf of the Hon. the Chief Minister) : (*a*) & (*b*) The question will be examined.

வித்துவான் தி. முத்துக்கண்ணப்பன் : ஐயா, இதைப்பற்றி மே மாதத்தில் டெல்லியில் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவில் விவாதிக்கப்பட்டதா ? என்ன முடிவு எடுக்கப்பட்டது ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : அந்த விவாதங்களெல்லாம் வெளியிடக்கூடியவை அல்ல. பரிசீலனை செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறேன்.

வித்துவான் தி. முத்துக்கண்ணப்பன் : அரசியல் கட்சிக் கொடிகளைக் கண்ட இடங்களில் பறக்கவிடுவது தேசிய ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கிறது என்ற காரணத்தால், அதைத் தடை செய்ய அரசாங்கத்திற்கு உடனடியாக நடவடிக்கை ஏதாவது எடுக்க உத்தேசமிருக்கிறதா ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் பரிசீலனை செய்யும் என்று சொன்னால், கனம் அங்கத்தினர் அவர்கள் மீண்டும் சொன்னதையே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.